𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

[illegible]

[illegible]

ப்ரம்மவித்தியா

சிதம்பரம்—விகாரி ஷூ கார்த்திகைமீ 18உ

ஆரியாசார ரகஸ்யம்.

தொடர்ச்சி.

சூடாகரணம்.

பிரமசாரிகளுக்குக் கபாலம் திரடப்பட்டுக் கல்வி பெறவேண்டித் தேஜஸ் அங்கு தங்குவதற்காகத் தீக்ஷை, அல்லது ஜடைதரித்தல்வேண்டுமென்று சொல்லப்பட்டது. பிறகு ஸமாவர்த்தனகாலத்தில் பில்வ கல்கமுதலியவைகளால் ஜடையைப் பிரித்துவிடவேண்டுமென்றறிக. அதன்பிறகு ஆலம் பாலுடனுவது அல்லது இல்லாமலாவது தரிப்பது ரேதஸ்ஸைக்கட்ட வேண்டியதின் பொருட்டே. இங்குள்ள கிபாயமிது. காற்று நிறைந்தசரீரத்தின் நாடிகளிலெங்கும்பரவியிருக்கிற ரக்தமானது தேஜஸ்ஸைச் சிறிதுசிறிதாக மயிர்க்கால்வழியாகவெளிப்படுத்துகிறது. அதனுற்றான் "நீண்டகாலமாகத் தபம் புரிபவர்களுக்குக் கும்பகவாயுவினுல் காலக்கிரமத்தால் மயிர்க்காலின் துவாராதேஜஸ் பிரகாசிக்கும்" என்று புராணங்கூறுகின்றது. ப்ரமரந்திரத்தின்வாயிலாகத் தேஜஸ்வின புகை கிளம்புகிறதென்றுமுரைக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால் ஜடைதரித்தலானது, ரேதஸ் ஊர்த்துவமுகப்படுகை கபாலம்முதலியவிடங்களில் லயிக்கவேண்டுவதற்கும் தீக்ஷை, தரித்தல் ரேதஸ்ஸை உறையச்செய்வதற்கும் ஏற்பட்டதென்றறிக. அந்த தீக்ஷையும் கிரஹஸ்தர் பிரமசாரிகளுக்குச் சிறிதுகாலத்திற்கே ஏற்பட்டுளது. வானப்பிரஸ்தர்கட்கு எக்காலமும் ஜடையே. யதிகளுக்கு ப்ரம்மசரியமாத்திரம் வேண்டுமாதலாலும், அதற்குப் பலம் அனுவசியமாதலாலும் முண்டனஞ்செய்துகொள்வதே யுக்தம். சில யதிகள் ஜடை தரிப்பதுமுண்டு. ஆயின் அவர்கட்குச்சிகை ஒருக்காலுங்கிடையாது. ஆகலால் முறை தவறாது தீக்ஷை தரித்தல்மிகுந்த பயனைபளிக்குமென்றது சித்தம். இனி நரையைப்பற்றிப் பேசுவாம்:—ரோமத்திலுள் துவாரமுளது. அதில் பரவிநிற்கும் ரேதஸினுடைய நிறம் கருமை. அதுவே ரஸதாதுவாகும். அதனுற்றான் கேசங்களும் கரியநிறமாகின்றன. அந்த ரேதஸ் காலக்கிரமத்தால் வெண்மையாவதுபற்றிக் கேசங்களும் நரைக்கின்றன. மயிற்காலிற்சென்ற ரஸதாதுவானது அதன்வழியாகக்

[illegible]

கேசத்துட்சென்ருல் அவைகளை வளர்க்கும். மயிற்கால் குறுகின் அங்ஙனஞ்செய்யாது அங்குள்ள வியர்வை தடைப்படுவதால் மயிற்கால் குறுகுகின்றது. ஆதல்பற்றியே எப்பொழுதும் சிரசில் குல்லாய் (cap) தரிப்பவர்கட்குநரையுண்டாவதுமன்றி 'இந்திரலுப்தாரோகம்' தாக்கியவர்களுடையதுபோல் கேசங்களுதிர்கின்றன. இங்கு அம்மட்டோ! பலகெடுதல்களுமுண்டு. 'பகலில் தலையை மூடிக்கொண்டு செல்லலாகாதென்று கௌதமர் கூறினர். சூரியகிரணங்கள் மயிர்க்காலில் தோன்றும் வியர்வையை ஆவியாகச்செய்ய வாற்றலுடையாதலால் அந்தவியர்வை சூரியகிரகணம் பட்டால் ஆவியாகச்செல்லும். அங்ஙனமில்லாது சிரசை மூடிவிட்டால் அவ்விடத்திலே மலமாகநின்று காலத்தால் மயிர்க்காலை மூடிவிடுகிறது. அதனுல் புதிதாகக் கேசங்கள் உக்பத்தியாகின்றனவில்லை. அங்ஙனமுற்பத்தியானவைகளும் உதிர்ந்துபோகின்றன. மயிர்க்காலடைபடுவதனுல் இயற்கைக்கு மிகுதியாக உஷ்ணமுண்டாகிறது. உள்ளேஉஷ்ணமிகுதிப்பட்டுபலம்குன்றுகிறதுடன் புத்தியும் பிரமையடைகிறது. வியர்வையானமலங்கள் சுவேச்சையாக வெளிப்படாதுபற்றி அதிகசோம்பலுமுண்டாகிறது. குளிர்மிகுந்த தேசத்திலும் தடிப்பான நீருள்ளவிடத்திலும் சிரசைமூடிக்கொள்வது குற்றமாகாததுமன்றி குணத்தையும் பயக்கும். எங்ஙனமெனின், ஜாக்ரத அவஸ்தையில் கபாலத்தின்கண் புருவங்களினிடையில் புத்திக்கிருப்பிடமென்று சாஸ்திராநுபவ சித்தமாதலால் அங்கு சுக்லம் செல்லாவிடில் புத்திக்குச்சற்றும் ஆற்றலிராதென்று மூதறிஞர்கொண்டவழி. இயல்பாகவே உஷ்ணம் நிறைந்தஇத்தேசத்தில் இளகிய சுக்லமானது தானுகவே புருமத்தியிற்சேரும். அங்ஙனமிருக்க, புடம் வைப்பதுபோல் அதனைத்தகைந்துவிட்டால் மயிற்கால் அடைபட்டு மிகுந்தகஷ்டத்திற்கு ஏதுவாகுமென்று அறிக. ஸ்திரீகளோ! மாதந்தோறும அவர்களுடைய ரஜஸ் வெளிப்படுவதற்காக மிகுந்த உஷ்ணத்தைச்சிரசில் வகிக்கவேண்டுமாதலின் அவர்கள் எப்பொழுதும் கேசங்களைத் தரித்தலவசியம், புமான்களுக்கு முடிதரித்தல் ரேதஸ்ஸை உறையச்செய்வதற்கும், ஸ்திரீகளுக்கு ரேதஸ்ஸை இளக்கச்செய்வதற்கும் ஏற்பட்டுளது. அறுபடாதகேசங்களின் நுனி அடைபட்டும், அறுபட்ட கேசங்களின் நுனி துறந்துமிருக்கும். ஆதல்பற்றியே அடைபட்ட கேசங்களின்வழியாக ரேதஸ் வெளிப்படாதாதலால் ஸ்திரீகள் எப்பொழுதும் முடிதரித்துக்கொள்வது கடமை. அவர்கட்கு

[illegible]

[illegible]

[illegible]

வைதவ்யம் சம்பவித்த காலத்தில் சிகையை எடுக்கும்படி நேரிடுமோதாலால் அப்பொழுது சிரஸைமறைத்துக்கொள்ளல் (முட்டாக்கு) அவசியமாம். ஆகையால் தீக்ஷைமுதலியன ,பதார்த்த சக்திக்கேற்றவாறு பெரியோர்களால் வியவஸ்தை செய்யப்பட்டதென்றறிக. ஜடை, தீக்ஷை, சிகை, முண்டனம், ஜனன முதல் கேசந்தரித்தல், ஜில்பாவைத்தல், கத்தரித்தல் முதலியன கேசங்களுக்கேற்பட்டுள்ளவியவஸ்தை. இனி அக்ஷராப்பியாசத்தைப்பற்றி நிரூபிப்பாம்-

வரும்

காலத்துககேற்றபடி புத்தகங்களியற்றுதல்

ஆரியர்காள் கேண்மின்!

நம்மவர் நற்கெதிபெறவேண்டுமென்ற நல்லெண்ணத்தைக்கொண்டு அனேக வித்வான்களால் இப்பொழுது சிறிது சிறிது முயற்சிசெய்யப்படுகிறது. அம்முயற்சி யாதெனின்:—

கீதை, உபநிஷத்து, தருமசாஸ்திரம்முதலிய நாம் முக்கியமாய் படிக்கவேண்டிய புஸ்தகங்களைக் காலத்துக்குத்தக்கபடி பாஷாந்தரங்களில் மொழி பெயர்த்தலே. வீட்டை விட்டு கீழ இறங்காதவர்களும், சம்சாரத்தின் முகத்தையே பெருத்த சபையாய் எண்ணியிருப்பவர்களும் உலகசுபாவத்தைக் கொஞ்சமும் அறியாதவர்களும் உலோகோபகாரமென்பதைக் கனவிலும் எண்ணுதவர்களுமான சிற்சில கர்நாடகக் கிழங்கள் அதைப்பாபமென்று சாபமிட்டுத்திரிகிறார்கள். அந்தோ! இதுவும் கலியன் நாடகத்தில் ஒன்றும். இப்பொழுது நம்மவரிருக்கும் நிலைமையைச் சிறிதும் அறியாதவர்மொழி யம்பலத்துக்குவருமா? நம்மவரை ஒரு மரப்பொமமைக்கு அரசனென வேஷம்போட்டு அரசனெனவழைப்பதுபோல் நம்மையும் ஆரியரென அழைக்கிறார்கள். நம்மிடத்தில் ஆரியரென்னும்பெயரை வகிக்கத்தக்க பெருத்தகுணங்களொன்றேனும் அமைந்திருக்கின்றனவா? எல்லோருக்கும் மேற்றிசைவாசனை பெருத்து நம்மவராசாரங்குலைந்து வைதிகந் துலைந்து கர்மானுஷ்டானங்கடந்து பாஷண்டக்கோலமாகி விட்டார்களே. காலத்தில் சந்தியாவந்தனம், காயத்திரி, பக்தியுடன் உண்டா? அக்னிஹோத்திரமுண்டா? ஔபாசனமுண்டா? வேதமோதலுண்டா? சாஸ்திரம் படித்தலுண்டா? சமயமின்னதென்று தெரியுமா? வே

[illegible] (பைபில்) [illegible]

தாந்தமென்பதைக் கனவிலுங்கண்டதுண்டா? ஒருநாழிகையேனும் குருவடிபணிந்து ஒருமொழி கேட்டதுண்டா? குருவுக்குப் பணிவிடையுண்டா? ஈசுவரபக்தியுண்டா? ஈசுவரபூஜையுண்டா? சம்ஸ்கிருதம் தெரியுமா? லோகோபகாரமுண்டா? காலம்வந்த சமயத்தில் சரீரத்தைத் திரணமெனவெண்ணித் தேசமும் மதமும் க்ஷேமப்பட வெளிவருபவரொருவருண்டா? ஆசான் முகமாய் முறையேபயின்ற மாணாக்கரொருவருண்டா? இல்லை இல்லை. எங்கேனுமொருவரிருவர் காணப்படுவர்களேயன்றி எங்குங்காண்பதரிது. அங்ஙனமிருக்க இப்பொழுது புத்திசாலிகள் செய்யவேண்டுவதென்னவென்று சிந்தித்து அதற்குத் தக்கமுயற்சிகளைச் செய்து அதற்கு உழைக்க வெளிவராத போலிக்குணமுடைய வேஷ வைதிகர்கள் வார்த்தையை நாவிலும் வைத்துப் பேசலாமா? நிற்க.

சுமார் சிலவருஷத்திற்குமுன் நம்மவரிருந்த ஸ்திதிக்கும் இப்பொழுதிருக்கும் நிலைமைக்குமுள்ள தாரதம்மியத்தைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம். முன்னே ஒரே படிப்பாக இங்கிலீஷ்பாத்திரம் படித்தகாலத்தில் கொஞ்சமும் நம் சமயப்பற்றின்றி பைபிலே வேதமென்றும் அதன் பாஷையே தேவ பாஷையென்றும் அவர்களே மேலானவர்களென்றும் அவர்களே நாகரீகர்களென்றும் தலைவிரித்து ஆடினவர்களும் நம்மவரே. பாதிரிகள்வசப்பட்டுக் குழாம குழாமாகக் கிறிஸ்துமதத்தில் சேர்ந்தவரும் நம்மவரே. நம சாஸ்திரவாடை சிறிதும் படாதகுறைவால் அத்திசை நாஸ்திக சாஸ்திரத்தைக்கற்று நம்மவரிடத்தில் ஒன்றுமில்லையென்று விழித்தவரும்நம்மவரே. கொண்டதேகோலம் கண்டதேகாக்ஷி யென்ற (Charles Broad law) (சார்லஸ் பிராட் லா) வார்த்தையைக்கேட்டு மயங்கினவரும் நம்மவரே. முழுதும் மேற்றிசைவாடையினல் நம்மவர் சுவரூபமின்னதென்று தெரியாமலதட்டுக்கெட்டவரும் நம்மவரே. இப்பொழுது நமது சுவரூபந்தெரிந்துஇவையெல்லாம் நமமவர்மனத்தில் நன்றாகத் தடிப்பாம்விருக்கச்செய்ததுயாதென்று நீங்களெண்ணுகிறீர்கள்- உங்கள் கம்பளி மடிசஞ்சியா? அல்லது உங்கள் லோகசுபாவம்தெரியாத வார்த்தையா? சொல்லுங்கள்- இல்லை இல்லை- நமது வேதமும் சாஸ்திரங்களும இங்கிலீஷ்பாஷையில் பயில போக்கியமாய், அப் பாஷையிலேயே வெளிவந்ததென்று தத்துவஞான சங்கத்தார் வெளிவந்து நம் சமயத்தைப்பற்றி இங்கிலீஷ்பாஷையில் உபந்நியாசங்கள் செய்ததும் பத்திரிகை பிரசரித்ததும் நம்மவரிற்பலர் அநேக புத்தகங்களைத் தமிழில் மொழிபெயர்த்துக்கரதலாமலகம்போற்காட்டியதும், கல்விக்களஞ்சியமெனச் சொல்லத்தக்க மகான் வெளிக்கிளம்பித் தென்னாட்டில் ஒவ்வொரு ஊராக உபந்நியசித்ததும் அநேகபுத்தகங்களைத் தமிழில் மொழிபெயர்த்ததுமன்றோ ஓர் மூலையில் தாங்குகின்றது.

இன்னும்வரும்,

ஆஸ்திகதாஸன்.

पत्रिकाः

पत्रिकाप्रेषकाभिप्रायाणां पत्राधिपा न प्रतिभुवः॥

ईरोड् (कोङ्गुदेशे) नगरे उपन्यासः॥

[illegible]

கடிதம்

கடிதகர்த்தர்களபிப்பிராயம் பத்திராதிபரைச்சாரா

ஈரோட்டில் உபந்நியாசம்

இவ்விடம் ஈரோட்டுக்கு டிஸ்திரிக்டு முன்சிபாக் வந்திருக்கும் ம-௱-௱-ஸ்ரீ டி. டி. இரங்காசாரியாரவர்கள் ஹிந்துமதத்தை நன்ருய் ஆராச்சி செய்தவராயும் அதில் விசேஷ அபிமானமுள்ளவராகவு மிருக்கிருர். அவரிங்கேவந்ததுமுதல் வாரந்தோறும் ஹிந்துமதவிஷயமாய் எதாவது பிரசங்கங்கள் நடந்துகொண்டுவருகின்றன. இப்பேர்க்கொற்ற பிரசங்கங்களினுல் நம்மவர்களுக்கு விசேஷ [பிரயோஜனமுண்டென்பதில் எவ்வளவுஞ் சந்தேகமில்லை. இப்பால்சென்ற இரண்டுவாரமாக ம-௱-௱-ஸ்ரீ இரங்காசாரியாரவர்கள் தாமே ஸ்ரீமத் இராமாயணத்தின்தத்துவார்த்தங்களைக் குறித்துச்சில பிரசங்கங்களைச் செய்வதாக ஆரம்பித் திதுவரையில் அவர்களால் மூன் றுபன்னிபாசங்கள்செய்யப்பட்டன. அவைகள் நம்மவர்களெல்லோரும் மிகுந்த ஆவலோடு கேட்டு ஆனந்தித்துவருகிருர்கள். அவர்கள் சொல்லிவருகிற ஆழ்ந்த கருத்துகள் அவ்வளவையுமெடுத்துரைக்க நானசக்தனுயிருந்தாலும் அந்தக் கருத்துகளின் ஸ்வாரஸ்யமானது ஏகதேசமாயாவது இவைகளைத்தங்கள்பத்திரிகையின் மூலமாய்வெளியிடும்படி என்னை யேவுகின்றது. ஆகையா லிதனடியிலிதுவரையில் நடந்த உபந்நியாசங்களின் ஸாராம்சத்தை எனக்குத் தென்பட்டமட்டிலெடுத்தெழுதி யினிமே லப்போதைக்கப் போது நடக்கப்போகிற அவர்களுடைய உபன்னியாசங்களின் கருத்துகளையும்வெளியிட எத்தனிக்கிறேன்

ஜகதீசுவரனுகிய பரமாத்மா அவதரிக்கக் காரணமென்ன? பரமாத்ம ஸ்வரூபத்தை யுள்ளபடி ஆராதிக்கச் சாமான்ய ஜனங்களசக்தர்கள். அதுபற்றிப் பரம கிருபாளுவாகிய பரமாத்மா மானிடஜன்மத்திலவதரித்துத் தன்னுடைய கல்யாணகுணங்களை யெல்லோருமறியும்படிதெரிவித்தார். கிருஷ்ணவதாரத்தில் சொல்லிக்காட்டினுர். இராமாவதாரத்தில் நடத்திக்காட்டினுர் பிரபஞ்சத்தில் ஈசுவரனுலமைக்கப்பட்ட ஸ்தூலவஸ்துக்களிலெல்லாம் ஸூக்ஷ்மமான கருத்துகளடங்கியிருப்பதுபோல் வால்மீகிசெய்த ஸ்ரீ ராமசரிதத்தில் மிகவு மற்புதமான ஆத்மஞான இரகசியங்கள் அடங்கியிருக்கின்றன. அவ்வாறு ஸூக்ஷ்மமான கருத்துகளுக் கிட

[illegible]

ங்கொடுப்பதினலேயே ஸ்ரீமத் ராமாயணம் போன்ற புராணங்களெல்லாம் வெறுங் கட்டுக் கதையென்றே நாம்தீர்மானிக்கவுங்கூடாது. ஏனெனில்சர்வசக்தனான பரமாத்மாவுடைய லீலைக ளபாரமானவை. அவைகளின்ன விதமாகத்தானிருக்குமென்று அவைகளுக்கோரெல்லை யேற்படுத்த யாராலேமுடியும்? ஆகையால் ஸ்ரீமத் இராமாயணமும் நடவடிக்கையில் நடந்தவிஷயமாகவே யிருக்கலாம். பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி சொல்லியபடி பிரபஞ்சத்திலெப்போதெப்போதுபாபகர்மம் வியாபித்துப் புண்ணியகர்மம்மலினத்தையடையுமோ அப்போதெல்லாம் பகவானுண்மையை நிலைநிறுத்தும்பொருட்டவதரிக்கிறார். இவ்வாறாக ஸ்ரீராமாவதாரமுமென்றறியவேண்டியது. ஸ்ரீ ராமாவதாரத்தின் முக்கிய வுத்தேசம் இராவண சம்ஹாரம். இராவணனாவதுயார்? சஞ்சலமே ஸ்வபாவமாயிருப்பதும், அகங்காரபீஜமுள்ளதும், காமக் குரோதாதிகளுக்கு இருப்பிடமாயுமுள்ளது மனது. இந்தமனதே இராவணனாகிய இராக்ஷஸஸ்வரூபம். அவன் பத்துத்தலைகளே தசவித இந்திரியங்கள். ஒரு இந்திரியத்தை யடக்கினால் மற்றொன்றுகிளம்புகிறது. அதையடக்கினால் மற்றொன்றுகிளம்புகிறது. இப்பேர்க்கொற்ற மனதின்விஜயமே ஸ்ரீமத் இராமாயணமாகிய பரமாத்மகீர்த்தி. இந்த இராவணனுடைய இருப்பிடம் இலங்கை. அதாவது நமது தேகம் இலங்கைச் சமுத்திரத்தால்சூழப்பட்டது. நமது தேகமும் பவசமுத்திரத்திலாழ்ந்தது. இந்த இலங்கையில் சிறைப்பட்டது சீதாதேவி. அதாவது மஹாலக்ஷ்மி. அவள் பரமாத்மாவை விட்டிணைபிரியாதவள். சூரியனுக்கு அவனுடைய பிரபையெப்படியோ அப்படிப்போன்றவள். அவள் இலங்கையில்சிறைப்பட்டது நமது தேகத்தில் ஜீவாத்மா அகப்பட்டுக்கொண்டுதவிப்பதைக்குறிக்கிறது. இராவணனை ஜயித்து அவளைச் சிறையிலிருந்து ஸ்ரீ ராமர்மீட்டதுமனதையடக்கி ஜீவாத்மா பரமாத்மபதத்தை யடைந்த கருத்தை விளக்குகிறது. தேகமாகிய பட்டணத்தில் மனதாகிய ராஜன் அதிகாரஞ்செலுத்துகிறவரையில் இந்திரியாதிகள் மனதினாலாளப்பட்டு அவஸ்தைப்படுகிறது. இந்திரியங்களுக்கு அபிமானிதேவதைகளாகிய தேவர்கள் இராவணனாலடைந்த அவஸ்தையைக்காட்டுகிறது. இது நிற்க. தண்டகாரண்யமென்பது அக்ஞான அந்தகாரத்தைக் குறிக்கிறது. அதில் தோன்றியபொன்மான் பிரபஞ்சவிஷயமென்கிற காம்மியவஸ்துவைக் காட்டுகிறது. மனதானது விஷயத்தினால் ஜீவாத்மாவை அபகரிப்பது

[illegible]

ஹஸ்தாக்ஷர:

ஈரோட் கோ. கி. ஸ.

31-10-99.

ஸகோத்ர விவாஹ:

ஸாமவேதாத்யாய:

[illegible]

[illegible]

போல் இராவணன் பொன்மானைக்கொண்டு சீதையை அபகரித்தான். மீனுக்குத் தூண்டில் எப்படியோ அப்படியே அஞ்ஞானியாகிய ஜீவாத்மாவுக்கு விஷயசன்னிதானம பொன்மானைத்தொட்டுச் சீதாதேவி பட்ட கஷ்டமெல்லாம் விஷய சம்பந்தத்தினல் ஜீவன்பட்ட கஷ்டமே. மனது எப்படிப் பிரமிக்கத்தக்க அதி மாயா ஸ்வருபமோ அப்படியே ராக்ஷஸவர்க்கமெல்லாம் அதி மாயாவிகள். இப்போக்சோற்ற மனதின் மாயாவிசித்திரத்தினல் காமத்தையடைந்து பிரமிக்கிற ஜீவாத்மாவைக் காப்பாற்றுவதில் எப்போதுஞ் சிரத்தையுள்ள மனச்சாக்ஷியென்கிற விவேகத்தைப்போல் இலக்ஷுமணன் சீதையைத் தடுத்துக்கோலேசெய்தவன், அவன் தடுத்தபோது ஸ்ரீ ராமர் ஒன்றுமறியாதவர்போல் மானைத்தொடர்ந்தது. ஜீவாத்மாக்களுடைய கர்மத்துக்குப் பரமாத்மாவெறுஞ் சாக்ஷியேதவிர வேறில்லையென்பதைக் காட்டுகிறது. மனச்சாக்ஷியையும் நிராகரித்து மனதின்வசப்படுகிற ஜீவாத்மாவைப்போல் இராவணனுடைய வலேயில் சீதை யகப்பட்டவள், அகப்பட்டசீதையை இராவணன் இலங்கையில் கட்டுப்படுத்தினன். அவ்வாறு கட்டுப்பட்டசீதையை இராவணன் பலவிதமான காம்மியவஸ்துக்களில் ஆசைமூட்டித்தன்னைச்சேரும்படி வேண்டிக்கொண்டது பிரதிதினம் ஜீவாத்மாக்களாகிய நம்மைப் பலவிஷயங்களில் இழுத்துக்கொண்டுபோக நம்முடையமனதானது சோதிப்பதைப்போலிருக்கிறது. இராவணனெவ்வளவுதூரம் வேண்டியும் அதற்குக் கொஞ்சமேனும் இடங்கொடாமல் பரமாத்ம ஸ்வரூபத்தையே இடைவிடாது ஸ்மரித்துக்கொண்டிருந்த சீதாதேவியானவள் ஜீவாத்மகோடிகள் மனதிற்கிடங்கொடாமல் இன்ன நிஷ்டையிலிருக்கவேணுமென்கிற யோகதிரடத்தையேகாட்டினுள். எப்படி ஆதியில் நசிகேதஸ்ஸென்கிற சிறுபிள்ளை எமதர்மாராஜாவால் தனக்குக்கொடுக்கப்பட்டதான சமஸ்த காம்மியவஸ்துக்களேயும் திரணமாகப் பாவித்து மரணத்தின் தத்துவமொன்றைமட்டும் அவனல் அறிந்துகொள்ள நிச்சயித்தானே அப்படியேநாமும ஆத்மஞான விஷயத்தில் சர்வமுயற்சியாயிருந்து அசாரத்தையடியோடே தள்ளவேண்டியதென்கிற இவ்வாறுன தாத்பரியங்கள் வரையில் உடங்கியாசம்கின்றிருக்கிறது- இனிமேன்மேலும் வருகிற கருத்துகளையும் பின்னல் தெரிவிக்கிறேன்-

ஈரோடு 31-10-99 கோ- கி- ஸ-

சகோத்திர விவாகமும், சாமவேதவாத்தியாரும்.

இதைப்பற்றி ஆசுவலாயனர் [illegible] தகப்பன் முதலில், பிள்ளை பிறகு, பேரன் அதன்பிறகு என்றும் '[illegible]' பெரியோரை முன்னேரென்றும் ஆபஸ்தம்பர் முதலிய மஹர்ஷிகள் பிதுர்பரம்பரையைப் பிரவாமே

[illegible]

யாஜுஷோபாகர்மநிர்ணய:

அநுவர்த்யதே॥

[illegible]

னக்கூறினர்கள்- ஆகவே பிரஜாபதியின் புத்திரர்களாகிய அத்திரி, பிருகு, முதலியோர் கோத்திர மூலபுருஷரானர்கள்- இதில் பிரவரபேதங்களையும் ஏகாரிஷேயம், த்வையாரிஷேயம், திரயாரிஷேயம், முதலிய பேதங்களையும் பிரவரர்கள் இன்னரென்பதையுந் தெரிவிப்பதற்கு வசிஷ்டரை உதாரணமாக வெடுத்துக்கொள்ளுவோம்.

வசிஷ் டருக்கு ஐந்ரபிரமதன், மித்திரவருணன், கௌண்டின்யன், சக்தி, இந்திரத்யும்னன், ஸத்தியரென, அறுவருண்டானர்கள்-அவர்களில், ஐந்திரபிரமதருக்கு ஆபரத்வஸு, லோஹிதரென இருவாதோன்றினர்கள்- அதில் ஆபரத்வஸு என்பவருக்கு வசிஷ்டரென்பவர் பிறந்தனர்- இவர் மந்திரதிருஷ்டாவில்லையாயினும் புத்திரனுடையவரானதால் கோத்திரமூல புருஷரானர்- இவர் கோத்திரத்தில் தோன்றியவனுக்குப் பிரவரம்யாதெனில், முதல் வசிஷ்டர் தொட்டு வாசிஷ்ட ஐந்திரப்பிரமத ஆபரத்வஸுதிரயாரிஷேயவாஸிஷ்டகோத்திரம் என்றல்வேண்டும்- லோஹித கோத்திரம பிரவரமோவெனில், அவர் மந்திரதிருஷ்டாவில்லாதலால்வாசிஷ்ட ஐந்திரபிரமத த்வயாரிஷேப லோஹிதகோத்திர: "வென்று கூறவேண்டும- கௌண்டின்னியர் மந்திரதிருஷ்டாவானதால்' வாசிஷ்டமைத்ராவருண கௌண்டின்னிய திரயாரிஷேய கௌண்டின்னியகோத்திர:' என்றுரைக்கவேண்டும்- வசிஷ்டரின் மூன்ருவது புத்திரனை கௌண்டின்யருக்கு மைத்திராயணர், லோஹிதர்,என்றிருபுத்திரர்கள்- அதில் மைத்திராயணருக்குக் கௌண்டின்னிபரென்றெருவர் பிறந்தனர்- அவர் மந்திரதிருஷ்டாவில்லாததால் "வாசிஷ்ட கௌண்டின்னிய மைத்திராவருண திரயாரிஷேய கௌண்டின்யகோத்திர: "எனல்வேண்டும்-

வரும்

யாஜுஷோபாகர்மநிர்ணயம்

எந்தக்கல்பத்தில் எந்தத்தருமத்தில் எந்த கிருஹ்யத்தில் வேறெந்தவிடத்தில் நமதுசூத்திரகாரராகிய ஆபஸ்தம்பர் சந்தியாவந்தனஞ்செய்யும் முறையைச்சொல்லியிருக்கிறர்? உபவீதந்தரித்துக்கொள்ளவாவதுசொல்லியிருக்கிறர்? உபாகரணஞ்செய்யவேண்டிய பிரகாரத்தை விரித்தனரோ? சந்தியாவந்தனம், உபவீததாரணம் உபாகரணஞ்செய்யும்முறை ஆக்னேயாதிகாண்டவிவாகங்கள் வேதவிருத்தங்கள் இவைகள் யாவும்மற்றவர்சொல்லியபடி செய்யலாமாயின் இக்காலத்தை மாத்திரம் கிரகிக்கக்கூடாதா? நிற்க- ஆபஸ்தம்பருமொரேகாலத்தையா விதித்தனர்? நாலவை மாதமென்று சிலர்- நாலுமாதமென்றே சிலர்- நாலு மாதமானல் ப்ரௌஷ்டபதியில் உபாகரணஞ் செய்யவேண்டுமென்று பாஷியகர்த்தர்கூறியது பிரமாணமல்லவா?

[illegible]

அங்ஙனமாயின் நான்குமாதமென்றதற்குக் கெதி யென்ன? (அர்த்தபஞ்சமான்) என்பதை விசேஷணமாகவும் (சதுர:) என்பதைவிசேஷணமாகவும்வைத்து நாலரைமாதமென்றே அர்த்தஞ்சொன்னால் சிராவணியிலேயே செய்ய வேண்டுமென்றாகும். அப்பொழுது ஆபஸ்தர் தான்கூறியதற்குவேறாயுள்ளதிதென்று (இத்யேகே)=(என்றுஞ்சிலர்) என்ற சொல்லால் காட்டினார். ஆகையால் இவ்விரண்டிற்கும் பேதங்கற்பிக்க வேண்டும். அப்பொழுது சாந்திசெய்யுங்காலத்து பேதாளமுதித்ததுபோல ப்ரோஷ்டபதியென்ற காலமுதிக்கின்றது. 'சாஸ்திராந்தரத்தில் சொல்லியதால்' என்றுபாஷியகர்த்தர் சொன்னமையால் சாஸ்திராந்தரத்தில் கண்டப்ரோஷ்டபதி யென்பது காலமாகலாம். ஆஷாடியுமெப்படிக் காலமாகுமென்றால் கூறுவாம். சாஸ்திராந்தரமென்பது யாது? போதாயன சூத்திரம் முதலியவைதான். அங்ஙனமே வைத்தியநாததீக்ஷிதரும் சிராத்தகாண்டத்தில் "யாஜுஷர்கள் தன் சாகையினொருசூத்திரமான போதாயன சூத்திரத்தையேகிரஹித்துக்கொள்ளவேண்டு' மென்றனர். அங்ஙனமேஅங்கிரஸஸும்—'தன் சூத்திரத்தில் சொல்லப்படாதவைகளை மற்றச் சூத்திரங்களிலிருந்து கிரஹித்துக்கொள்ளலாம். அதிலும் போதாயன சூத்திரத்திற் கூறியவாறு செய்தால் தன்சூத்திரத்திற் கூறியதைச் செய்தபயனையடைவான்' என்றார். தன்சாகையிற்சொல்லப்படாதவைகளைவேறு சூத்திரங்களிற்கூறியபடிசெய்யலாம். அதனாற்றான் ஆபஸ்தம்பர் முதலாய மஹரிஷிகளாற் சொல்லப்படாத (உபநயனம் செய்தவர்களுக்குப் பூணூல்போடுவதும், உபாகருமத்தில் பிரும்மசாரிகள் க்ஷவரஞ்செய்து கொள்வதும் சந்தியாவந்தனம் காயத்திரீஜபம் முதலியவைகளையும் போதாயனர் முதலாய ரிஷிகள் கூறியவாறு செய்கிறார்கள். அங்ஙனமில்லாமற்போனால் தன் சாகையைவிட்டு மற்றவைகளை யாசிரயித்த தோஷம் நேரிடுமென்று தன்கிருஹ்யத்தில் சொல்லப்படாதவைகளைப் போதாயன சூத்திரப்படி யனுஷ்டிக்கவேண்டுமென் றேற்பட்டபடியாலும் போதாயனர் ஆஷாடியைக் காலமாகவெடுத்தபடியாலும் சிராவணி பாத்திரபதிகள் தோஷமுள்ளதாயின் ஆஷாடியுங்காலந்தான். கிற்க. நேயரே! இவ்

[illegible]

வுபாகரணம் சந்தியாவந்தனம்போல் நித்தியகருமமா யின் சூதகாதிகளில்கூடச் செய்யவேண்டுமென்றேற் படுமல்லவா? அங்ஙனமாயின் சூதகாதிகளினுபாகர ணஞ் செய்யக்கூடாதென்ற நிஷேத வாக்கியங்களுக் கென்ன சமாதானந் தீர்மானித்திருக்கிறீர்? அவ் வச னங்களாவன, சாமவேதிகள், ருக்வேதிகள், யஜுர் வேதிகள் ஆகிய இவர்கள் வரிசையாய் கிரஹணம், சங்கிராந்திமுதலிய தோஷமற்றதான ஹஸ்த நக்ஷத் திரம் சிரவண நக்ஷத்திரம பர்வம் இவைகளில் உபா கரணஞ்செய்வார்கள். சங்கிராந்தி கிரஹணம சூதகம் சாவாசௌசமிவைகளில் கணஸ்நானம் செய்யககூடா தென நாரதர்கூறியது. "அமாவாசை, சங்கிராந்தி, ஷஷ்டி, இவைகளில் செய்யும்படி நேரிட்டாலுஞ் செ ய்யக்கூடாது. மலமாசம், சூதகம், சாவாசௌசம், கிர ஹணம் சங்கிராந்தி முதலியவைகளில்செய்யக்கூடாது' என்பதாதியனேக வசனங்களிருக்கின்றன. மலமாசம், சூதகம், முதலியவைகளில் செய்யக்கூடாதென்றநிஷே தம் பிரதமோபாகரணம் செய்பவனுக்கேயன்றி மற்ற வர்க்கில்லையென்றால் தாய், தந்தையர்கள் மரித்துச் சாவாசௌசம் வந்திருக்கும்பொழுது சந்தியாவந்தனத் தைப்போலுபாகரணத்தையும் எங்கேயாவது சிஷ்ட ரான வைதிகாள் அனுஷ்டித்திருக்கிறார்களா? அங்ஙன மனுஷ்டித்தவர்களிருந்தால் சிஷ்டஸமாஜரகஸ்யங்களை யறிந்த தமக்கு அவசியந்தெரியுமாதலின் அவர்களை யெமக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன். அவர்க ளுக்கு நமஸ்காரவிண்ணப்பத்தாலாவது நாங்கள் கிரு தார்த்தர்களாகுவோமாக. பின்னும் கால மாதவத் தில் "உபாகருமம் உத்ஸர்க்கம, காம்மியகாரியங்கள் அஷ்டகாசிரார்த்தம் இவைகளை அதிகமாததில் செ ய்யக்கூடாது. பிதிரு சிரார்த்தமொன்றைததவிர மற் றவைகளைப்பின்னிட்டே செய்யவேண்டியது' என்று மலமாதத்தில் உபாகரண சாமான்னிய நிஷேதத்தை ச்சம்மதிக்கமாட்டார்போலும்! குருசுக்கிர பௌட்டிய த்திலும், மலமாசத்திலும் முதலாவதுபாகரணத்தைச் செய்யக்கூடாதென்றதைக் கைக்கொண்ட நமதுநண் பர் "அரசமரத்தைப்பிடித்த பிசாசு பிள்ளையாரையும் பிடித்ததா' மென்றதுபோல் இவர் மயங்கினதுமன்றிப் பெரியோர்களையுமம் பலத்திற்கிழுக்கிறார். ஒரு சமயம்

[illegible]

ருதகமுதலியவைகளைத் தோஷமாக நினைத்தாரில்லை போலும்! அங்ஙனமாயின், அவைகளில் உபாகரணஞ்செய்யக்கூடாதென்று நிஷேதித்தவசனங்களை எங்ஙனங்காட்டினர். நிற்க, பிரதமோபாகரணம் சுபகருமமாகையால் தோஷமற்ற காலத்திற்றான் செய்யவேண்டுமென்று சொல்லி, மிகத்தோஷமுள்ள நிலுற்றான் செய்யவேண்டுமென்று முடித்தார். அதை நிருபிப்பாம். இவர் முதலில் பிரதமோபாகரணஞ் செய்பவர்கள் ஆடிமாதம் லே செய்யவேண்டுமென்றார். பிறகு அதே மாதத்தில் வருகிற ஆஷாடபூர்ணிமை மிகவும் நிஷித்தமாமென்று சில வசனங்களை உதகரித்தார். அவ்வசனங்களான:—சூரியன் கடகராசியிலிருக்கும்பொழுது அதாவது ஆடிமாதத்தில் உபாகரணம் நேர்ந்தால் செய்யக்கூடாது, ஆவணியிலேயே செய்யவேண்டும் என்பதுமுதலியன. இதனால் ஆஷாடபூர்ணிமை மிகவும் நிஷேதிக்கப்பட்டதாகையால் அதிற்செய்யவேகூடாதென்று சொல்லி, அதிலேதான் பிரதமோபாகரணம் செய்யத்தான் வேண்டியது என்று நிர்ப்பந்தப்படுத்துகிறார். இதற்குப்பிரமாணவசனம் மிக இரகசியமென்றெண்ணி நிதியைப்போல் மனதிலேயே வைத்துக்கொண்டார்போலும்! கற்றவரோ! முதலாவது உபாகரணத்திற்குநிஷித்தமான ஆஷாடியும், மற்ற உபாகரணங்களுக்கு துஷ்டமான சிராவணியும் குற்றமற்றது என்றும், ஆடிமாதத்திலுபாகரணஞ்செய்யக்கூடாதென்பது இரண்டாவது முதலிய உபாகரணங்களுக்குத்தானென்றும், குருசுக்கிரமௌட்டியத்திலும் மலமாதத்திலும் செய்யக் கூடாதென்பது பிரதமோபாகரணத்திற்கு மாத்திரமென்றும், எந்தக்குருவினிடமிருந்தையா படித்தீர்? வைத்தியநாததீக்ஷிதாவர்களின் இரகசியாபிப்பிராயங்களைக் கற்றுணர்ந்த இவருக்கு ஆடிமாதத்திற் செய்யக்கூடாதென்றது தேசாந்தரவிஷயமென்ற அவர் கூறியது தெரியாமற்போனதேதனாலோ? அவர் மட்டோ! கமலாகரபட்டர்,கோபீநாதபட்டர் முதலிய நிபந்தனகாரர்களனைவரும் கூறியிருக்கிறார்கள். அஃதெங்ஙனமெனின்? நிர்ணயசிந்துவில் நர்மதையென்ற நதிக்கு வடக்கேயுள்ளவர்கள் சூரியன் சிம்மராசியிலிருக்கும்பொழுது செய்யவேண்டும். தென்பக்கத்திலுள்ளவர்களோவென்றால், கடகத்தில் இரவியிருக்கும்பொழுது செய்யலாமென்றுபிரயோகபாரிஜாதத்திற்கூறியதும், பராசரமாதவீயத்தில் கூறியதும் ஸாமவேதிகள் விஷயம். அவர்கட்குத்தான் இந்த வியவஸ்தை. இருக்குவேதிகள் முதலியோருக்கு இல்லை என்றும், ஸம்ஸ்காரரத்னமாலையில் (வேதோபகரணே) என்ற வசனமும் (நர்மதோத்தரபாகே) என்ற பிருகஸ்பதிவசனமும் ஸாமவேதிகளைப்பற்றியது. இல்லாவிடில், வாக்கியபேதத்தை நிவர்த்திக்க முடியாதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆடிமாதத்தில் உபாகரணஞ்செய்யக்கூடாதென்றால், அதே மாதத்திற்சிராவணிவந்தால் அப்பொழுதும் இந்த நிஷேதமுண்டல்லவா? அங்ஙனமிருக்க, அதிலுபாகரணத்தை எங்ஙனஞ்சிஷ்டர்களனுஷ்டிக்கிறார்கள். சூரியன் கடகராசியிலிருக்தம்பொழுது உபாகரணஞ்செய்யலாமென்றதற்குச் சில வேறாதாரங்களுமிருக்கின்றன. ஸம்

[illegible]

ஸ்காரரத்தினமாலையில் பவிஷ்யத்தில் மகாநதிவிஷயமாய் ஆடிமாதம் முதலில் மூன்றுநாள் மகாநதிகள் ரஜஸ்வலைகளாக இருக்கின்றன. நான்காவது தினத்தில் சுத்தமாய்விடுகின்றன, கங்கையோவென்றால், எப்பொழுதும் சுத்தந்தான். மதனரத்தினத்தில், ஓ அரசனே! தேவிகை, காவேரி, வஞ்சுளை முதலிய மகாநதிகள் ஆடிமாத முதலில் மூன்றுநாள் ரஜோதுஷ்டைகளாயிருக்கின்றன. காத்தியாயனர்—"கௌதமீ முதலிய நதிகள் ஆடிமுதலில் மூன்றுநாள் ரஜஸ்வலையாம்" என்று தொடங்கி நதிகளுக்கு இத்தோஷத்தைச்சொல்லிவிட்டுச்சில விஷயங்களில் இத்தத் தோஷமில்லையென்று குறிக்கின்றார். அவரே உபாகருமத்திலும் உத்ஸர்க்கத்திலும் பிரேதஸ்நானத்திலும் சந்திரசூரியகிரகணங்களிலும் நதிகளுக்கு ரஜோதோஷமில்லை என்று இத்தவிஷயமொவ்வொரு நிபந்தனங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. நமது பண்டிதர் ஆஷாடி மிகவும் நிஷித்தமென்று ஆலோசிக்காமல் அவசரப்பட்டுக் கூறினரேயன்றிவேறல்ல. ஏனெனில், மதனபாரிஜாதத்தில்—நிகமம். சிராவணியில் சிராவணிகருமத்தை முறைதவறாது செய்யவேண்டும், கடகத்திற் சூரியனிருக்கும்பொழுதுமுபாகரணஞ்செய்யலாம், ஹஸ்தத்தில் சுக்கிலபஞ்சமியில் சிராவணியில் சிரவணநக்ஷத்திரத்தில் செய்யவேண்டும். இங்கு தன் கிருஹ்யத்திற்கூறியவாறு செய்யவேண்டும் என்பது சாதாரணமான நிர்ணயம். அதில், இருக்குவேதிகள் சிரவணத்திலும், யஜுஸ்சாகிகள் பூர்ணிமையிலும் அவர்களுள் தைத்திரீயசாகிகள் பூர்வவித்தமானபர்வத்திலும், மற்றவர்கள் உதயபர்வத்திலும் ஸாமவேதிகள் ஹஸ்தத்திலும் செய்யவேண்டியது. இந்த நிர்ணயம் சிரவணுதிபிராதான்னியத்தால் ஏற்பட்டது. யஜுர்வேதிகள் கிரகணம் ஸங்கிராந்திமுதலிய பிரதிபந்தமில்லாவிடில் சிராவணமாதத்திலேயே செய்யவேண்டியது. அதில் தோஷம் ஸம்பவித்தால் பிரௌஷ்டபதியில். இரண்டிலுந்தோஷம் ஸம்பவித்ததைதன் சாகையில் ஆஷாடிக்குத்தோஷஞ்சொல்லப்படாமலிருந்தால் விரோதமில்லாதது "பிறருடைய தாயினும்கிரகித்துக்கொள்ளலா"மென்ற வசனத்தாலும் போதாயனரிஷியால் சொல்லப்பட்டிருக்கிறபடியாலும் ஆஷாடியில் செய்யவேண்டியது. ரிக்வேதிகளுக்கும் சாமவேதிகளுக்கும் ஆஷாடத்தில் சம்பவிக்காது. ரிக்சாகை சாமசாகைகளிலோரிடத்திலும் சொல்லப்படாதபடியாலும் சிஷ்டபரம்பரையில் கேட்டதில்லையாகையாலுமென்க.

இன்னும்வரும்,

உபநிடதங்களும், ரௌரவசித்தாந்திகளும்.

(தொடர்பு.)

விதண்டாவாதி! பண்டையக்காலந்தொடங்கிபல்வகை நியமங்களுடன் பாதுகாத்துவந்த எங்கள் வேதவேதாந்தங்களை நாங்கள் புறட்டினோமென வாதிப்பது, ஆதிகாலந் தொடங்கி ஆண்மக்கள் மனம்போனவாறு அநுபவித்து வந்த பெண்களை விவாகவிதியென்ற பொய்க்கட்டேற்படுத்தி வீண் விலங்குக்கு ஆளாக்கினவர் ஆடவரென, வேசிகள் பேசும வாதத்தையல்லவோ நமது வாதம் நினைப்பூட்டுகின்றது. இரண்யாக்ஷன், இரண்யகசிபு, ராவணன், கும்பகர்ணன், சூரபத்மன், சேவார்த்தகன், கராந்தகன், யக்ஞசத்ரு முதலிய மகரிஷிகள் வாசஞ்செய்த புண்ணியாச்சிரமமாகிய நம் நாட்டில் நமக்குப் பாரம்பரைமுறை பிறழாது உபநிருகணங்களையும் உபநிடதங்களையும் உபதேசித்த ஆசிரியர் சுத்த புத்த சச்சிதானந்தமூர்த்திகளேயாம்போலும். போதும் போதும். கலிவாதம்-இவ்வளவேதானோ; கலியுகத்தின்கண்ணே சைவவைணவ பாஷண்டர்கள் பலருண்டாய் அவர் வேதவைதிக நிந்தை செய்வதே தொழிலாய்க்கொள்வாரெனக் கூர்மம் முதலிய பல புராணங்கள் நிரூபித்தனவாம். ஆதலின் அத்தீர்க்கதரிசனம் நிறைவேறுதற்பொருட்டு அவதரித்த நும்மையும் நுமதினத்தாரையும் அவதாரபுருஷரென்னுது சந்தேகாஸ்பதமான சங்கரர் அவதாரத்தைப் பெருமைப்படுத்துவது சான்றோருக்கு நியாயமாமா? இல்லை இல்லை.

அவதாரபுருஷரே! இனியகலியுக ஹாரத்தரே! வீணில் வேத வைதிகநிந்தைசெய்து சிவகோபத்திற்குஆளாய், அன்று மார்க்கண்டேயருக்கு விரோதஞ்செய்த காலனுர் கெதியைப் பெறுநீர். என்றும் திங்கள்சூடி எம் நிகம்பரக்கடவுள் வேதவைதிக விப்பிராபிமானியென்பதை நீவிர் அறியீர்போலும், ஆதியில் மழுவேறி மாதேவன் பெருமை விளக்கிய மாசிலாவக்துரைமணி கஞ்சனூர்ச்செல்வரை நவாஹணா நவரவண-ந்நிவெஷவணெந ஸஂஹாவயெபெஜி.நஃ வுவடஂ வு ஊரணஂ. பிராமணஜாதியிற் பிறந்து கீழ்ச்சாதியாரை குருவென்று மதிக்கும் அந்தணரை யாம் மதியோம்- 'பிரபதப்ராம்மணப்ரமாணத்தால்' என்று உபதேசித்தருளியது நுமது கண்ணுக்குஅகப்படாதுபோனகாரணம்யாதோ? ஹஊஉ வஉ நவ ஜொகெ கொவிநாஹிவுதிஜு ஃ-ருத்திரரை வணங்குவதுபோல்எவ்வளவுஉலகத்தில் விபரீதங்கள் இருக்கின்றன

வென அப்பயதீட்சிதர் பெமான் அருளிச்செய்ததும் நமக்குப் புலப்படவில்லைபோம். ஐயோ! ஏதோ தமக்கு வேதாதிகாரமில்லாது வினைவர் அந்தணாளர் எனக்கொண்டு அவரிடத்தே அகாரணத்துவேஷத்தால் சில வருணவரர் சில சுவடிகளை எழுதவைக்க அந்தணர் பெருமை இத்தன்மைத்தென அறிந்தனும் குடியிராத நாட்டிலே வெகுகாலமிருந்து அந்நூல்களே சத்சித்தாந்தங்களென நம்பின இவருக்கு மீண்டும் நன்னல போதிப்பது முடியாத காரியமே கிறம். ஏதோ பூர்வபுண்ணியவசத்தால் காசிவாசமும் விசுவேசன் சேவையும்இவருக்கும் கிடைத்ததெனச் சந்தோஷிருப்ப முன்னமே மன்றுநாழிகை முத்துமழைபெய்வாரிவரென்பதன்முன் மாமாரிபெய்த்ததென்பதுபோலஅவ்வாசசத்தை நிலைக்க வொட்டாது இவரை த்துரத்தது யாதோ அறியோம். அக்காட்டைவிட்டகற்றித்தென்னுட்டின் தென்முனைக்கும் வந்திருக்கின்றது. மிட்டக்கிட்ட தன்கடையட்டுவர்போலு. காசியில்போய் வாழ்ந்தும் கண்டபடி வேத வைதிக நிந்தைசெய்தது ஈசனுக்கே பொறுக்காது. அன்று அகஸ்தியதுவேஷத்தால் நகுஷமகாராஜன் சுவர்க்கம்பெற்ற கதியைப்போல்இவர் காசிவாசமும்பெற்றது போலும். அஃது எங்ஙனமாயினும் ஆகுக.இனியேனும் உண்மையறிந்து ஜகத்குருநாத திருவடிமலர்களைச் சிரமேற்கொண்டு ஆரியரிடஞ்சென்று அவருக்குத் தொண்டுபுரிந்து அவரிடத்தே முறைப்படி சோத்த உண்மைகளைக்கற்றுப் பரமசிவனைச் சிவோஹமென் றசனேயெனப்பாவித்து இருதார்த்தராமாறு இப்பவத்திலில்லாவிடினும் மிற்பவத்திலாவது இவருக்கு ஈசன் அருளசெய்வாரோ ஏதோ அறியோம். வேதவேதாந்தங்களை முறைப்படி கற்றுணர்ந்த ஷட்சாஸ்திர வல்லவர் முன்னிலையில் இவர் வாதம் சற்றும் மணம்பெறு தொழியும். ஆயினும் வடமொழிப் பயிற்சியற்ற இத்தென்னுட்டவர் இவர் வாக்ஜாலங்கண்டு மயங்காவண்ணம் இவ்வளவுடன் உபநிடதங்களை இவர்செய்த ஆடம்பரத்தை யொழித்துத் தொலைத்தோமென்க.

சுபம்.

யாழ்ப்பாணம் கா-ா-ா-ஸ்ரீ செந்திநாதையரால் வரையப்பட்ட புஸ்தகத்திற்கு மறுப்பாகசிதம்பரம் ப்ரம்மவித்தியா பத்திராசிரும் பரமேசுவரோபநிஷன்மார்க்கப் பிரவர்த்தகரும் ஸ்ரீமத் மகாமகோபாத்தியாயஸ்ரீ தியாகராஜமகி புங்கர் சிஷ்யருமான பரசமய பஞ்சானன பாஞ்சஜன்ய பண்டித ப்ரம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸசாஸ்திரிகளவர்களது சிஷ்யகோடிகளுள் ஒருவரான நாகலிங்கசிவனுல்இயற்றப்பட்ட "உபநிடதங்களும் ரௌரவசித்தாந்திகளும்" என்ற வைதிகசந்திரமௌலியி னிரண்டாம்பாகம் முற்றுப்பெற்றது.

சுபம்

NOTES OF "BRAMAVIDYA"

ப்ரம்மவித்தியா

குறிப்புகள்.

"சிவ சிவ சிவ சிவ ஜகதீசா சிவகாமிபிரியநடராஜா" என்று ஆன்றோர்கள் எம்பெருமானைத் துதிக்கிறார்கள். பாமரர்கள் 'பெண்டாட்டிபூஜை பெரும்பூஜை' என்று நினைத்துக்கொண்டு எப்பொழுதும் இல்லாதேவேதிலும், டைதேவேதிலும், பிரஜையுண்டுபண்ணுவதிலும் ஜாகரூகர்களாய் இருக்கிறார்கள். இவருள் யார் மேலானவர்கள் என்னில், கடவுளினிடத்துப் பக்தியுடையவர்தான்; அவரிடத்துபக்திசெய்தால் அனைத்தையும் கொடுக்கும். ஆதலால், இவ்வாயில் அநேகர் பக்தியென்னுங்கப்பலேறி, சம்சாரமென்னுஞ்சாகரத்தைத்தாண்டி முக்தியென்னுங்கரையேறி, முக்திநாதனைச் சேவித்திருக்கிறார்கள். அங்ஙனமே நாமும் எவ்வளவு சமுசாரபந்தத்திற்கட்டுண்டிருந்தாலும், சிறிதளவேனும் அரும்பெருந்தகையை அம்பலத்தரசை, அடியார்க்கடியனைச்சின்மயரூபனை சிந்தையிலிருத்தி, 'சிவ சிவ சிவ சின்மயநாதா! சிந்தையில் வந்தருள் பொன்மயரூபா' என்று ஒவ்வொருநாளும்பக்தியுடன் பஜித்து, பேரின்பசாகரத்தில் ஆழ்வோமாக.

*

* *

"வேதாந்தானுபவம் படித்தால் சும்மா" தன்னைத்தானறிய உலகத்தில் அநேகர் பாடுபடுகிறார்கள். அதைப் பலவிதமாகப் புத்தகரூபமாகப்படித்துவிட்டோன் ஞானி நான் ஞானி' என்று தலைமொட்டையடித்துக்காவித்துணியை உடுத்துக்கொண்டவிடமெலாம் திரிகிறார்கள் நாம் ஒரு ஞானியைக் கண்டோம், அவர் மெள்ளமாய் தாம்பிரபரணிக்கரையில் உட்கார்ந்திருந்தார்- அவரை அவ்வூரிலிருக்கும் கிரகஸ்தர்கள் பார்த்தவுடன், எல்லோரும் நமஸ்கரித்தார்கள். அதில் ஒருவர் பிக்ஷை தமதகத்தில் பண்ணவேண்டுமென்று தாழ்வுடன்சொன்னார். அதற்கு ஞானி (மாஸ்து) என்றார்- எல்லோரும் போய்விட்டார்கள்- பிறகு ஒருவர்வந்தார்- அவரிடத்தில் ஞானியானவர் எனக்கு முறைப்படிபிக்ஷைசொல்லாததால் வேண்டாமென்று சொல்லிவிட்டேனென்றார்- பிறகு மற்றொருவர் வந்து பிக்ஷைக்கு வரவேண்டுமென்றுதாழ்வுடன் நமஸ்கரித்துச் சொன்னார்- நீர் காலையில் சொல்லவில்லை அதனால் உம்மிடத்தில் பிக்ஷையில்லையென்றார். மற்றொருவர் யதிகளுக்கு விதியில்லை- எப்பொழுதாவது சொல்லலாமென்று காலையில் சொல்லவில்லையென்றார். உடனே ஞானிக்குக்கோபம் வந்துவிட்டது. (You Stupid Go) 'யு ஸ்டுபிட் கோ' என்று திட்டினார். அவர் போய்விட்டார். பிறகு அவ்வூரார் சந்நியாசி பட்டினியாயிருக்கிறாரென்று எல்லோரும் ஆகாரத்தையும் எடுத்துக்கொண்டு தாம்பிரபரணிக் கரையில் வைத்துக்கொண்டு பிக்ஷைக்கழைத்தார்கள். உடனே யதி எனக்கு வேண்டாமென்றதும் அல்லாமல் எல்லோரையும் திட்ட ஆரம்பித்துவிட்டார். மற்றவர்கள் பசியாற்றுது அவரவர்கள் உண்ணச் சென்றுவிட்டார்கள். பிறகு யதீந்திரர் எல்லாம் சொப்பனமென்று சொல்லிக்கொண்டு ஒவ்வொரு வீட்டு வாசலிலும் கையில் சின்முத்திரைபிடித்துக்கொண்டு நின்றார். ஒருவராவது திரும்பிப்பார்க்கவில்லை. கடைசியில் ஒரு சாது கொஞ்சம் அன்னத்தைக் கொண்டுவந்து வாசலிலேயே உட்காரவைத்து போட்டார். கையில் வாங்கி உண்டார். அதன்பிறகு சுவாமிக்குச் சித்தம் சுவாதீனத்துக்கு வந்தது. பிறகு ஆத்மப் பிரசம்லை அஷ்டமாத்தியாயத்தைப்பாராயணத்துக்கு ஆரம்பித்து நான் F. A. பரீக்ஷை செய்திருக்கிறேனென்றும் ஜாலம் வாதாம் எல்லாம் தெரியுமென்றும் தான் அதிவர்ணாச்சிரமியென்றும் விவேகானந்த சுவாமிகளை சுமார் பத்துவருஷத்துக்குமுன் திருவனந்தபுரத்தில் கண்டு பேசினதில்தான் கேட்ட கேள்விக்குப்பதிற்சொல்லவில்லையென்றும் ப்ரம்மஸ்ரீ மகாமகோபாத்தியாய ராஜூசாஸ்திரிகளவர்களை அநுபவ வேதாந்த சபை வைக்கச்சொன்னேன். அவர் முடியாதென்று சொல்லிவிட்டாரென்றும் ப்ரம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸசாஸ்திரிகளை தாம் ஒரு சமயம் சென்னையில் கண்டபோது அவர் ராமனைச் சிவபக்தனென்று ஜாபாலிபரிணயத்திலிருந்து ஒரு சுலோகத்தைச் சொல்லி அதில் மாரில் விபூதியிருந்ததென்றுகூறியிருப்பதால் சாம்பவனென்று சொன்னாரென்றும் அதற்குத் தாம் சமாதானம் ஒருமுறையாவது செய்தீரோ என்று கேட்டேனென்றும் தன் சரித்திரங்களை எடுத்துத்தானே சொல்லிக்கொண்டது மல்லாமல் உபநிஷத்துக்களுக்குத் தான் சொல்லும் அர்த்தம்போல்ஒருவரும் சொல்லமாட்டாரென்றும் இன்னும் பலவித படாடோபமொழிகளுடன் முடித்தனர். அந்தோ! இது விந்தையினும் விந்தையே. ஞானியினிலக்கணம் இதுவா? ஞானத்தை அற்பமாக மதித்துத் திரிகிற இவ்வேஷதாரிச் சன்னியாசிகளால் மகான்களுக்கு மன்றோ மதிப்பு குறைந்துபோய்விடுகிறது. எவ்வளவு ஜென்மாந்திர சுகிருதமேலிட்டால் சாதனசதுஷ்டயம் சம்பத்து கிட்டி சிரவணமனன நிதித்யாசனத்திற்குப் பிறகு குருவருள் கிடைத்து அடையவேண்டிய இந்த ஞானத்தைக் கடைத்தெருவில் வியாபாரஞ் செய்து அகங்காரச்சன்னியாசிகள் அம்பலத்துக்கிழுக்கிறார்களே! இதுவும் கலியின் விந்தையே!

இன்னும் வரும்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

கீர்வாண வாகபரிபாலன ஸபை.

கல்லிடைக்குறிச்சி.

அறிஞர்மணிநாள்!

இம்முறை நாம் சண்ட புதிய விஷயமொன்றை ஆன்ஞேரிடத்து அறிவிக்கவேண்டுவெதவசியமன்றே.

மேலே மகுடம் புனைந்த சபையின் மஹோத்தாரண நன் முயற்சியை என்னவென்றியம்புவாம். கலிமகாராஜன் ஆட்சியில் கற்றவரெலாம் கண்மூடி உறங்குங்காலத்தில் பெருந் தன்மை பொருந்திய இப்பெரிய நகரத்து ரெத்தினம்போல் பிரகாசிக்கும் இச்சபையாரால் நடத்த முயற்சிக்கும் பெருத்த விஷயங்கள் ஒவ்வொன்றும் அறிஞரனைவரும் மெச்சத்தக்கதே. இதுகாறும் அவர்களால் அச்சிட்டிருக்கும் புத்தகங்கள் அளவிலடங்கா. நடத்தியிருக்கும் உபந்நியாசங்கள் அனேகம். இச்சபை 1900ளூ ஜெனவரிமீ 1உ அன்று புதிதாக வாடகைக்கு வாங்கிய கட்டடத்தில்கூடியது. அதில் அவ்வூரிலுள்ள சனவான்களும் தனவான்களும் கல்விமான்களும் வந்திருந்தார்கள். அப்பொழுது ப்ரம்மஸ்ரீ ப்ரம்மவித்தியா பத்திராதிபர் ஸ்ரீ- ஸ்ரீநிவாஸ தீட்சிதரவர்கள் சிஷ்ய கோடியில் ஒருவராகிய ப- வெங்கட்டராம சர்மா என்பவரால் நம்மவருக்கு நேர்ந்திருக்கும் அதிசோக அவஸ்தைக் கோர் அளவில்லையென்றும் நம்மவர் அனைவரும் நம்சமயத்தைத்தார்க்க வெளிவரவேண்டுமென்றும் கற்றவரில் அநேகர் கண்மூடி உறங்குகிறார்களென்றும் அதையெல்லாம் கவனித்தால் ஆரியகுமாரர்களுக்குமிக்க விபரீதம் நேருமென்றும் சுருக்கியும் விளக்கியும் உபந்நியாசித்தார்- பிறகு அச்சபையின் காரியதரிசியாகிய மகா-ள-ள-ஸ்ரீ கிருஷ்ணய்யரவர்கள் அவ்விஷயத்தையே ஆமோதித்துப் பேசினர்- பிரசிடெண்டு மகா-ள-ள-ஸ்ரீ ராமசுவாமி அய்யரவர்களும் அதைப்பற்றிப்பேசினர்- பிறகு சபையில் சந்தனம் தாம்பூலம் வழங்கப்பட்டது- நீடூழி இச்சபை இப்படியே கூடி உலகத்துக்கு உபகாரத்தை விளக்கவேண்டுமென அம்புலி அணிநாதன் செங்கமலச் சேவடியைத் துதித்துச் சபை கலைந்தது- சுபம்-

சுந்தரம்.